**செய்தி வெளியீடு எண்: 06/2024** **நாள்: 09.01.2024**

## பத்திரிக்கைச் செய்தி

## சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மற்றும் கட்டுமானத் தொழில் மேம்பாட்டு கவுன்சில் இடையே கூட்டுறவு ஒப்பந்தம்

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மற்றும் கட்டுமானத் தொழில் மேம்பாட்டு கவுன்சில் (CIDC) ஆகியவை கட்டுமானம் மற்றும் மெட்ரோ இரயில் துறைகளை முன்னேற்றுவதற்கான கூட்டு முயற்சியைக் குறிக்கும் வகையில், கூட்டுறவு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் திட்ட இயக்குனர் தி.அர்ச்சுனன் மற்றும் CIDC நிறுவனத்தின் பொது இயக்குனர் பி.ஆர்.ஸ்வரூப் ஆகியோர் இந்த கூட்டுறவு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

CIDC, இந்திய அரசாங்கத்தால் தொழில்துறையுடன் இணைந்து நிறுவப்பட்டது, இந்திய கட்டுமானத் துறையின் பல்வேறு கூறுகளை தீவிரமாக ஈடுபடுத்தும் பிரதிநிதி அமைப்பாக செயல்படுகிறது. தமிழ்நாட்டில் மெட்ரோ திட்டங்களை செயல்படுத்தும் மாநில நிறுவனமான சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், நகர்ப்புற போக்குவரத்து உள்கட்டமைப்பை மேம்படுத்துவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகிறது. இந்த கூட்டுறவு ஒப்பந்தம் ஒத்துழைப்பு மற்றும் பூர்த்திசெய்தல், வணிக செயல்முறைகளை ஒழுங்குபடுத்துதல், சிறந்த நடைமுறைகளைப் பரப்புதல் மற்றும் பாதுகாத்தல், தரம் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாக கொண்டுள்ளது.

இந்த கூட்டுறவு ஒப்பந்தத்தில் இரு தரப்பினருக்கும் இடையேயான முக்கிய கூறுகள், செயல்திறன் மேம்பாடு, தர உத்தரவாத அமைப்புகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நிலையான இயக்க நடைமுறைகள் மூலம் வாடிக்கையாளர் ஆர்வத்திற்கு முன்னுரிமை அளிக்கிறது. மேலும் இந்த கூட்டுறவு ஒப்பந்தம் நிறுவனம் மற்றும் திறன் மேம்பாட்டு நடவடிக்கைகள், முழுமையான மனித வள மேம்பாடு, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, பணிக்குழுக்கள், செயல்பாட்டு வளங்கள் மற்றும் உள்கட்டமைப்பு ஆதரவு ஆகியவற்றை வலியுறுத்துகிறது.

இந்த கூட்டுறவு ஒப்பந்தம் கட்டுமானம் மற்றும் மெட்ரோ இரயில் துறைகளில் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டை வளர்ப்பதற்கான ஒரு குறிப்பிடத்தக்க காரணியைக் குறிக்கிறது.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**